TNTS090044402024

மாண்பமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சங்கரன்கோவில்.

**முன்னிலை : திரு.M. மாரி, M.S.W., L.L.B.,**

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 06– ஆம் நாள் சனிக்கிழமை

**சுருக்குமுறை விசாரணை வழக்கு எண்.2074/2024**

அரசுக்காக: உதவி காவல் ஆய்வாளர்,

கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலையம்

(கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலைய குற்ற எண்.34/2024)

……... குற்றமுறையீட்டாளர்

/எதிர்/

1. பாலகிருஷ்ணன், வயது, 30,
   த/பெ. குருசாமி,
   பாரதிநகர், கரிவலம்வந்தநல்லூர்.
2. இசக்கிமுத்து, வயது, 43,
   த/பெ. கருப்பன்,
   பாரதிநகர், கரிவலம்வந்தநல்லூர்.
3. முத்துக்குமார், வயது, 38,
   த/பெ. கருப்பன்,
   பாரதிநகர், கரிவலம்வந்தநல்லூர்.
4. மகாராஜா, வயது, 17,
   த/பெ. இசக்கிமுத்து,
   பாரதிநகர், கரிவலம்வந்தநல்லூர்.

……. எதிரிகள்

| | | |
|---|---|---|
| **1.** | Case Number | S.T.C No. 2074/2024 |
| **2.** | Name of the Police Station and Crime Number | Karivalamvanthanallur Police Station<br>Crime No.34/2024 |
| **3.** | Name of the Accused | 1. Balakrishnan<br>2. Esakkimuthu<br>3. Muthukumar<br>4. Maharaja |
| **4.** | Date of Occurrence | 01.02.2024 |
| **5.** | Date of surrender | -- |

| | | |
|---|---|---|
| **6.** | Date of Arrest | Absconding |
| **7.** | Period of remand | Absconding |
| **8.** | Date of release on bail | Absconding |
| **9.** | Date of filing final report | 14.11.2024 |
| **10.** | Date of Commencement of trial | 14.02.2025 |
| **11.** | Date of Chief examination | PW1 21.05.2026<br>PW2 21.05.2026<br>PW3 21.05.2026<br>PW4 03.06.2026 |
| **12.** | Date of Cross examination | PW1 21.05.2026<br>PW2 21.05.2026<br>PW3 21.05.2026<br>PW4 03.06.2026 |
| **13.** | Date of Conclusion of trial | 04.06.2026 |
| **14.** | Plea of the accused | Not guilty |
| **15.** | Finding of the Court | The accused 1 to 4 are found not guilty for the offences u/s.294(b)of IPC and therefore the accused are acquitted under Section 255(1) Cr.P.C. |

கடந்த 14.11.2024 தேதியன்று இந்நீதிமன்றத்தின் சுருக்குமுறை விசாரணை வழக்கு எண். 2074/2024 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி பொது வழக்கறிஞர் நிலை –1 அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.சண்முகையா, B.Sc., B.L., ஆகியோர்கள் ஆஜராகியும் இவ்வழக்கானது 06.06.2026 அன்று என் முன்னர் இறுதி விசாரணைக்கு வரப்பெற்று ஆவணங்களை பரிசீலனை செய்து, இந்நீதிமன்றம் வழங்கும் ...

## தீ ர் ப் பு ரை

இவ்வழக்கானது கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலையத்தார் 1 முதல் 4 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு 294(b)–ன் கீழ் குற்ற எண். 34/2024–ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள கு.வி.மு.ச. பிரிவு 173(2)–ன் கீழ் இறுதி அறிக்கையை நீதிமன்றம் கவனமுடன் பரிசீலனை செய்து போதுமான காரணம் எதிரிகள் மீது குற்றம் விசாரிக்கத்தக்க

முகாந்திரம் உள்ளது என இந்நீதிமன்றம் திருப்தி அடைந்து பின் கு.வி.மு.ச. பிரிவு 190 (1) (b)–ன் கீழ் இவ்வழக்கு நீதிமன்றம் தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டது.

**1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :**

1.1 இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் அவரது மகனான சாட்சி–2 கார்த்திக் கடந்த 01.02.2024–ம் தேதி 19.30 மணியளவில் கரிவலம்வந்தநல்லூர் பாரதி நகர் கூட்டுறவு வங்கிக்கு தென்புறம் உள்ள பிள்ளையார் கோவிலுக்கு பின்புறம் வைத்து சாட்சி–2 ஐயும், அவரது நண்பனையும் டைப் கிளாஸ் போகும்போது ஏன் முறைத்துக் கொண்டு இருக்கிறீர்கள் என்று இவ்வழக்கின் 1–வது எதிரியிடம் கேட்ட புகார்தாரரைப் பார்த்து எதிரிகள் அனைவரும் சேர்ந்து புகார்தாரரையும், சாட்சி–2 ஐயும் சட்டையைப் பிடித்து தள்ளி "ஏலே தேவிடியா புண்ட மக்களா நீங்க என்ன ஊர்ல பெரிய ரவுடி சுன்னியா" என்று பொது இடத்தில் வைத்து அசிங்கமாக பேசியதாக தெரிவிக்கப்பட்டு, 1 முதல் 4 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b)–ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **எதிரிகளுக்கு வழக்கு ஆவணங்கள் வழங்கி, குற்றம் குறித்து வினவிய விபரம் ;–**

2.1 இவ்வழக்கின் எதிரிகளுக்கு கு.வி.மு.ச.பிரிவு 204–ன்படி அழைப்பணை அனுப்பி எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் அரசு தரப்பு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச.பிரிவு 207–ன் கீழ் எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு, போதிய காலஅவகாசம் அளித்து, இரு தரப்பும் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலனை செய்தவகையில் கு.வி.மு.ச. பிரிவு 240(1)–ன் கீழ் எதிரிகள் மீது கீழ்க்கண்டவாறு குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டன.

1) இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் அவரது மகனான சாட்சி–2 கார்த்திக் கடந்த 01.02.2024–ம் தேதி 19.30 மணியளவில் கரிவலம்வந்தநல்லூர் பாரதி நகர் கூட்டுறவு வங்கிக்கு தென்புறம் உள்ள பிள்ளையார் கோவிலுக்கு பின்புறம் வைத்து சாட்சி–2 ஐயும், அவரது நண்பனையும் டைப் கிளாஸ் போகும்போது ஏன் முறைத்துக் கொண்டு இருக்கிறீர்கள் என்று இவ்வழக்கின் 1–வது எதிரியிடம் கேட்ட புகார்தாரரைப் பார்த்து எதிரிகள் அனைவரும் சேர்ந்து புகார்தாரரையும், சாட்சி–2 ஐயும் சட்டையைப் பிடித்து

தள்ளி "ஏலே தேவிடியா புண்ட மக்களா நீங்க என்ன ஊர்ல பெரிய ரவுடி சுன்னியா" என்று பொது இடத்தில் வைத்து அசிங்கமாக பேசியதாக குற்றத்திற்காக 1 முதல் 4 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு 294(பி)–ன் கீழ் தண்டிப்பதற்குரிய குற்றம் புரிந்ததாக குற்றச்சாட்டு வனையப்பட்டன.

3. மேற்படி வனையப்பட்ட குற்றச்சாட்டுக்களை எதிரிகளுக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, விளக்கப்பட்டு குற்றத்தை ஒத்துக்கொள்கிறீர்களா ? அல்லது விசாரணையை வேண்டுகிறீர்களா? என்று வினவப்பட்டது. அப்போது எதிரிகள் குற்றச்சாட்டுக்களை மறுத்தார்கள்.

4. இதற்குப்பின் அரசு தரப்பில் சாட்சிகளை ஆஜர்படுத்த உத்தரவிடப்பட்டது. அதனடிப்படையில், அரசு தரப்பில் மொத்தம் அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

6. அரசு தரப்பு சாட்சிகள் விசாரிக்கப்பட்டபின், அவர்களது சாட்சியத்தில் எதிரிகளுக்கு எதிரான சங்கதிகள் பற்றி நேரடியாக விளக்கம் பெறுவதற்காக கு.வி.மு.ச. பிரிவு 313(1)(b)–ன் கீழ் கேள்விகள் கேட்டபோது எதிரி பொய் என்று மறுத்தார்கள்.

## 7. <u>தீர்மானிக்கப்பட வேண்டி பிரச்சனைகள் :–</u>

1) எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபித்துள்ளனரா?

2) எதிரிகள் குற்றவாளி எனில், எதிரிகளுக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை என்ன?

**8. <u>நிரூபண சுமை :–</u>**

இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 101–ன் படி(BSA– 104) அரசு தரப்பில்தான் எதிரிகள் குற்றத்தை செய்தார்கள் என்பதை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்க வேண்டிய சுமையானது (Burden of proof) அரசு தரப்பை சார்ந்ததாகும்.

9. **<u>அரசு தரப்பு சாட்சியங்களும், பரிசீலனையும் :–</u>**

9.1 இந்த வழக்கில் எதிரிகள் மீது இது முதலாவது குற்றச்சாட்டு என்பதும், இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் அவரது மகனான சாட்சி–2 கார்த்திக் கடந்த 01.02.2024–ம் தேதி 19.30 மணியளவில் கரிவலம்வந்தநல்லூர் பாரதி நகர் கூட்டுறவு

வங்கிக்கு தென்புறம் உள்ள பிள்ளையார் கோவிலுக்கு பின்புறம் வைத்து சாட்சி–2 ஐயும், அவரது நண்பனையும் டைப் கிளாஸ் போகும்போது ஏன் முறைத்துக் கொண்டு இருக்கிறீர்கள் என்று இவ்வழக்கின் 1–வது எதிரியிடம் கேட்ட புகார்தாரரைப் பார்த்து எதிரிகள் அனைவரும் சேர்ந்து புகார்தாரரையும், சாட்சி–2 ஐயும் சட்டையைப் பிடித்து தள்ளி "ஏலே தேவிடியா புண்ட மக்களா நீங்க என்ன ஊர்ல பெரிய ரவுடி சுன்னியா" என்று பொது இடத்தில் வைத்து அசிங்கமாக பேசியதாக குற்றத்திற்காக 1 முதல் 4 எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு 294(பி)–ன் கீழ் தண்டிப்பதற்குரிய குற்றம் புரிந்தாரா? என்பதை அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து பின்வருமாறு பரிசீலனை செய்யலாம்.

9.2 மேற்படி முதல் குற்றச்சாட்டை இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 294 உட்கூறுகள் அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபணம் செய்ய வேண்டும். அதன் ஊட்கூறுகள் பின்வருமாறு:–

**பிரிவு 294:– ஆபாசச் செயல்களும் பாடல்களும் :– மற்றவர்களுக்குத் தொந்தரவாக இருக்கும்படி** –

அ) பொதுவிடம் எதிலும் ஆபாசச் செயல் எதையும் செய்கிற, அல்லது

ஆ) பொதுவிடம் எதிலும் அல்லது அதற்கு அருகில், ஆபாசப் பாடல்கள், கதைப்பாடல் அல்லது சொற்கள் எதையும் பாடுகிற, ஒப்பிக்கிற, அல்லது மொழிகிற எவரும் – மூன்று மாதங்கள் வரை சிறைத்தண்டனையோ, அல்லது ஓராயிரம் ரூபாய் வரை அபராதமோ, அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

9.3 சம்பவ இடமானது கரிவலம்வந்தநல்லூர் பாரதி நகர் கூட்டுறவு வங்கிக்கு தென்புறம் உள்ள பிள்ளையார் கோவிலுக்கு பின்புறம் ஆகும். இதனை அ.சா.1 சாட்சி மூலம் அறியலாம். மேற்படி பிரிவு 294(b) உட்கூறுகள் பொருந்தவேண்டும் எனில், சம்பவ இடமானது பொது இடமோ அல்லது பொது இடம் அருகில் ஏற்பட்டிருக்க வேண்டும் என கூறப்பட்டதிலிருந்தே இந்த அரசு தரப்பு வழக்கில் அதுபோன்று அ.சா.1 சாட்சி சம்பவ இடம் பொது இடம் என்றோ, பொது இடம் அருகில் என்றோ குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை. குறிப்பாக, அ.சா.1 தனது நீதிமன்ற முதல் விசாரணை சாட்சியத்தில், "ஆஜர் எதிரிகளைத் தெரியும் என்றும், எதிரி மகாராஜாவை தெரியும் என்றும், தான் எதிரிகளுடன் சமாதானம் சென்று விட்டதாகவும், வழக்கை மேல் நடத்த விரும்பவில்லை என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம்

தன்னுடையதுதான் என்றும், அதை போலீசார் எழுதியுள்ளார்கள் என்றும், அதில் என்ன எழுதியிருந்தது என்று தனக்கு தெரியாது என்றும், அதிலுள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 என்றும், வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை" என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அதேபோன்று, சம்பவத்தை நேரில் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 கார்த்திக் மற்றும் அ.சா.3 ராஜா ஆகியோர்கள் தங்களது நீதிமன்ற முதல் விசாரணை சாட்சியத்தில், " ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், எதிரி மகாராஜாவை தெரியும் என்றும், வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது. போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும்" சாட்சியம் அளித்துள்ளார்கள். மேற்படி சம்பவத்தால் பாதிக்கப்பட்ட அ.சா.1 மற்றும் சம்பவத்தை நேரில் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர்களின் சாட்சியங்களிலிருந்து 1 முதல் 4 எதிரிகள்தான் அ.சா.1 ஐ பொது இடத்தில் வைத்து அசிங்கமான வார்த்தைகளால் பேசியதாகவும், அதனால், அ.சா.1 க்கு தொந்தரவு ஏற்பட்டது என்றும் குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை. மாறாக அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்து பிறழ் சாட்சிகளாக மாறியுள்ளார்கள். இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 294(b)–ன் கீழான குற்றச்சாட்டில் 1 முதல் 4 எதிரிகள் தண்டிக்கப்பட வேண்டுமெனில், பாதிக்கப்பட்ட நபரை பொது மக்கள் மத்தியிலோ, பொது இடத்திலோ, பொது இடம் அருகிலோ பாதிக்கப்பட்டவரை அவமானப்படுத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் ஆபாசமான அருவருக்கத்தக்க மொழி பேசியதால் பாதிக்கப்பட்டவருக்கு தொல்லை ஏற்படுத்தியதாக இருக்க வேண்டும். அப்படி எதுவும் இந்த வழக்கில் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பால் 1 முதல் 4 எதிரிகளுக்கு எதிராக நிரூபணம் செய்யவில்லை என்பதை பரிசீலனை செய்து, **<u>1) கே.ஜெயராம் மஞ்சு எதிர் ஜானகிராஜ் 1990 மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பின்படியும், 2) பவன்குமார் எதிர் ஹரியானா (1996) 4 SCC 17 என்ற மாண்பமை உச்சநீதிமன்ற தீர்ப்பில்</u>**

> “ 294(b)பொருந்துவதற்கு மூன்று கடுமையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என தெளிவுபடுத்தியுள்ளனர். அவை பின்வருமாறு
>
> (i) அந்த செயல் ஒரு பொது இடத்திலோ அல்லது அதன் அருகிலோ செய்யப்பட வேண்டும். அதாவது ஆபாசமான வார்த்தைகள் உச்சரிக்கப்பட வேண்டும்.

(ii) அந்த வார்த்தைகளோ அல்லது செயலோ உண்மையில் ஆபாசமானதாக இருக்க வேண்டும்.

(iii) அந்த ஆபாச வார்த்தை கேட்டதால் மற்றவர்களுக்கு தொந்தரவு ஏற்பட்டிருக்க வேண்டும்.

என்றும் கூறப்பட்டுள்ளது. மேற்படி அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சியத்தின் மூலம் 1 முதல் 4 எதிரிகள் மீதான இ.த.ச. பிரிவு 294(b) –ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பினரால் மேற்படி 294(b) உட்கூறுகளையும், மாண்மை உச்ச நீதிமன்றம், உயர்நீதிமன்றம் முன்தீர்ப்புகளில் கூறப்பட்டுள்ளதையும் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதி, 1 முதல் 4 எதிரிகளை இ.த.ச. பிரிவு 294(b) குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்படாததால் 1 முதல் 4 எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

10. மேலும், அ.சா.4 ஆன காவல்துறை அதிகாரியின் சாட்சியத்தை பரிசீலிக்கையில் அவர் தனது சாட்சியத்தில், இறுதியறிக்கையில் சொல்லப்பட்டுள்ள அரசு வழக்கிற்கு ஆதரமாக வழக்கு கோப்புகளின் அடிப்படையில் சாட்சியமளித்துள்ளார். அ.சா.4 ன் சாட்சியத்தின் மூலம், இவ்வழக்கின் புகார் மனு சம்மந்தமாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை குறித்தும், விசாரணை அதிகாரிகள் சம்பவ இடம் சென்று தயார் செய்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் குறித்தும் மட்டுமே தெரிய வருகிறது. இந்நிலையில் இவ்வழக்கில் புகார் மனு கொடுத்ததாக அரசு தரப்பில் சுட்டிக்காட்டப்படும் அ.சா.1, சம்பவத்தை நேரடியாக கண்ணுற்றதாக அரசு தரப்பில் சுட்டிக்காட்டப்படும் அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர்கள் அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக பிறழ் சாட்சியம் அளித்துள்ள நிலையில், வழக்கு கோப்புகளை மட்டுமே பார்வையிட்டு அதனடிப்படையில் சாட்சியம் அளித்துள்ள அ.சா.4–ன் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு, 1 முதல் 4 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுவிட்டதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்க இயலாது என்றும் இந்நீதிமன்றம் கருதி 1 முதல் 4 எதிரிகள் இ.த.ச. பிரிவு 294(b)–ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

15) **<u>எதிரிகள் குற்றவாளிகள் எனில், எதிரிக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை என்ன?</u>**

16.1 மேற்படி அரசு தரப்பில் 1 முதல் 4 மீது சுமத்தப்பட்ட இ.த.ச. பிரிவு 294(b)–ன் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பால் நிருபணம் செய்யவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கப்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு எந்தவித தண்டனையும் வழங்க இயலாது என இந்நீதிமன்றம் தீர்மாணிக்கிறது.

16. இறுதியாக, 1 முதல் 4 எதிரிகள் இ.த.ச. பிரிவு 294(b)–ன் கீழான குற்றச்சாட்டுக்கள் கீழான குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து 1 முதல் 4 எதிரிகளை கு.வி.மு.ச.பிரிவு 255(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. 1 முதல் 4 எதிரிகள் ஏற்கனேவே இவ்வழக்கு சம்மந்தமாக இந்நீதிமன்றத்தில் வழங்கியிருந்த பிணை முறிவு பத்திரத்தை மேல்முறையீடு காலம் முடிந்த பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

17. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படாததால் அது குறித்து உத்தரவு ஏதுமில்லை.

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழை திருத்தம் மேற்கொள்ளப்பட்டு 2026–ம் ஆண்டு ஜுன் சனிக்கிழமை, 06–ம் நாளான இன்று என்னால் இந்தத் தீர்ப்புரை அவையறிப்பகரப்பட்டது.

(ஒம்/–எம்.மாரி)
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
சங்கரன்கோவில்.

**<u>அரசுத் தரப்பு சாட்சிகள்:</u>**

1. அ.சா.1 திரு. குமார் ( நிகழ்நிலை புகார்தாரர்)
2. அ.சா.2 திரு.கார்த்திக் (சம்பவத்தை நேரில் கண்ணுற்றவர்)
3. அ.சா.3 திரு ராஜா (சம்பவத்தை நேரில் கண்ணுற்றவர்)
4. அ.சா.4 திரு. சசிக்குமார் (தலைமைக்காவலர், கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலையம்)

**<u>அரசுத் தரப்பு சான்றாவணங்கள்:</u>**

அ.சா.ஆ.1 03.02.2024 புகார் மனுவில் உள்ள அ.சா.1 ன் கையொப்பம்

அ.சா.ஆ.2 03.02.2024 புகார் மனு

அ.சா.ஆ.3 03.02.2024 முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.4 03.02.2024 பார்வை மகஜர்

அ.சா.ஆ.5 03.02.2024 மாதிரி வரைபடம்

அ.சா.ஆ.6 03.02.2024 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை

**அரசு தரப்பு சான்று பொருட்கள் :** இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை.

(ஒம்/−எம்.மாரி)
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
சங்கரன்கோவில்.